ஸ்ரீவேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில் மார்ச் 8-ல்

அன்னக்கூட திருப்பாவாடை மஹோற்சவ வைபவம்

■ சென்னை

மயிலாப்பூர் ஸ்ரீநிவாச பெருமாள், வேதாந்த தேசிகர் கோயிலில் மார்ச் 8-ம் தேதி அன்னக்கூட திருப்பாவாடை மஹோற்சவம் நடைபெற உள்ளது.

சென்னை மயிலாப்பூரில் கேசவ பெருமாள் சந்நிதி தெருவில் ஸ்ரீநிவாச பெருமாள், வேதாந்த தேசிகர் கோயில் உள்ளது. ஸ்ரீநிவாச பெருமாளுக்கு அன்னக்கூட நிவேதனங்கள் செய்தால் மழை பொழியும் என்ற நம்பிக்கையில் ஒவ்வொரு ஆண்டும், இத்தலத்தில் அன்னக்கூட திருப்பாவாடை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டுக்கான அன்னக்கூட திருப்பாவாடை மஹோற்சவம் மார்ச் 8-ம் தேதி நடைபெற உள்ளது. காலை 9 மணி அளவில் ஸ்ரீநிவாச பெருமாள், அலர்மேல் மங்கை தாயார், ஸ்வாமி தேசிகன் உற்சவர் நவகலச திருமஞ்சனம், மதியம் 12 மணி அளவில் திருப்பாவாடை சமர்ப்பித்தல், தீர்த்தம், ஸ்ரீசடாரி, மாலை 6.30 மணி அளவில் பெருமாள், ஸ்வாமி தேசிகன் புறப்பாடு, மாலை 7.30 மணி அளவில் பெருமாள், தாயார், ஸ்வாமி தேசிகன் பத்தி உலாத்தல் நடைபெறும்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஸ்ரீ ஸ்ரீநிவாச பெருமாள் வேதாந்த தேசிகர் கைங்கர்ய டிரஸ்ட் (SSPVD Kainkarya Trust) அங்கத்தினர்கள் செய்து வருகின்றனர். கூடுதல் தகவல்களுக்கு 8056003624, 9962579812, 9092923868 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று மயிலாப்பூர் ஸ்ரீவேதாந்த தேசிகர் தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

749 பேருக்கு ரூ.19 கோடியில் நலத்திட்ட உதவி

காஞ்சிபுரத்தில் அமைச்சர் காந்தி வழங்கினார்

■ காஞ்சிபுரம்

பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் அமைச்சர் ஆர்.காந்தி பங்கேற்று 749 பேருக்கு ரூ.18.70 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை ஆகிய துறைகள் சார்பில் நேற்று நலத்திட்ட உதவி வழங்கும் விழா நேற்று காஞ்சியில் நடைபெற்றது. இந்த விழாவுக்கு ஆட்சியர் சினேகா தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் ஆர்.காந்தி பங்கேற்று பேசியது:

தமிழக அரசு நிலமற்ற ஏழை எளிய மக்கள் மற்றும் பட்டா இன்றி நீண்டகாலமாக குடியிருப்பவர்களுக்கு முன்னுரிமை அளித்து பட்டா வழங்கி வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 2021 மே மாதம் முதல் இதுவரை 33,919 பேருக்கு ரூ.579.71 கோடி மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக வருவாய்த் துறை சார்பில் 655 பயனாளிகளுக்கு ரூ.18.53 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 8 பேருக்கு ரூ.13.11 லட்சம் திருமண நிதியுதவியும், சமூக நலத்துறை சார்பில் 80 பேருக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. மேலும், 6 பயனாளிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரங்கள் என மொத்தம் 749 பேருக்கு ரூ.18.70 கோடி மதிப்பிலான உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

இதற்கு முன்னதாக கோனேரிக் குப்பம், தேவரியம்பாக்கம், மானாம்பதியில் ரூ.46.86 லட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த சேவை மையங்கள், காஞ்சி மாநகராட்சி வேகவதி ஆற்றின் குறுக்கே ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பாலம், தார் சாலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் எம்.பி. க.செல்வம், எம்எல்ஏக்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர் பா.முருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாசி மகம், பாரம்பரிய இருளர் திருவிழாவை முன்னிட்டு

மாமல்லபுரத்தில் 'ஆற்றல் அரங்கம்' நிகழ்ச்சி

■ சென்னை

மாசி மகம் மற்றும் பாரம்பரிய இருளர் திருவிழாவை முன்னிட்டு பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் சார்பில் மாமல்லபுரத்தில் பழங்குடியின பட்டதாரி இருளர் இளைஞர்களுக்கான 'ஆற்றல் அரங்கம்' நிகழ்ச்சி நடைபெற்றது.

பழங்குடியின பட்டதாரி இளைஞர்கள் கல்வியைத் தொடரவும், வாழ்க்கையில் உயர்ந்த இலக்குகளை அடைவதை ஊக்குவிக்கவும் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பல்வேறு மாவட்டங்களிலிருந்து 127 பெண்கள் உட்பட 257 பட்டதாரி இருளர் இளைஞர்கள் இதில் பங்கேற்றனர்.

பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் எஸ்.அண்ணாதுரை, செங்கல்பட்டு ஆட்சியர் மாலதி ஹெலன் ஆகியோர் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். சமூக செயற்பாட்டாளர் வி.பி.குணசேகரன், அரசியல் சாசன மற்றும் சட்ட உரிமைகள் குறித்து கலந்துரையாடினார். பேராசிரியர் இரா.கலீஸ்வரன் சிந்தனையைத் தூண்டும் பாடல்கள், உரையின் மூலம் சமூக யதார்த்தங்களை விமர்சன ரீதியாக அணுக இளைஞர்களை ஊக்குவித்தார்.

பாடலாசிரியர் யுகபாரதி, இருளர் சமூகத்தினரின் இயல்பான திறன்களை எடுத்துரைத்தார்.

தொடர் கற்றல் மற்றும் தன்னம்பிக்கை மூலம் எதையும் சாதிக்கலாம் என்று கூறினார். முனைவர் பட்ட ஆய்வாளர்கள், பொறியாளர்கள் மற்றும் பட்டதாரிகள் என பல்வேறு நிலைகளில் உள்ள இருளர் இளைஞர்கள் தாங்கள் எதிர்கொண்ட சவால்களையும், கல்வி எவ்வாறு அவர்களின் வாழ்க்கையை மாற்றியது என்பதையும் பகிர்ந்துகொண்டனர்.

இது போன்ற நிகழ்ச்சி தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என அனைவரும் வலியுறுத்தினர்.

மாமல்லபுரத்தில் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் சார்பில் நடைபெற்ற, பழங்குடியின பட்டதாரி இருளர் இளைஞர்களுக்கான ஆற்றல் அரங்கம் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள்.

அய்மான் ஜமால்

செங்கையில் முதல் பெண் காவல் கண்காணிப்பாளர் பதவி ஏற்பு

■ செங்கல்பட்டு

மாவட்டத்தின் முதல் பெண் காவல் கண்காணிப்பாளராக அய்மான் ஜமால் நேற்று பதவி ஏற்றுக்கொண்டார்.

செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வந்த பி.சிபின், ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக அண்மையில் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அதேபோல் ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக இருந்த அய்மான் ஜமால் செங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் நேற்று முதல் பெண் கண்காணிப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். மேலும் மாவட்டத்தின் 9-வது எஸ்.பி ஆவார். இவர், ஏற்கெனவே ஆவடி துணை ஆணையராகவும், சத்தியமங்கலம் ஏ.எஸ்.பியாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காமாட்சி அம்மன் கோயில் மாசி பிரம்மோற்சவம் நிறைவு

■ காஞ்சிபுரம்

காமாட்சி அம்மன் கோயிலில் இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவ விழா கடந்த பிப். 21-ம் தேதி அதிகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வுகளான தங்கப்பல்லக்கு, நாக வாகனம், மகாரத உற்சவம் எனப்படும் தேரோட்டம் நடைபெற்றன. நேற்று முன்தினம் இரவு பிரம்மோற்சவத்தின் சிகர நிகழ்ச்சியாக தங்க காமகோடி விமானத்தில் அம்மன் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதனைத் தொடர்ந்து, நேற்று அதிகாலை கோ பூஜை, விஸ்வரூப தரிசனம் நடைபெற்றன. மாலையில் விடையாற்றி உற்சவம் நடைபெற்றது.

இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை காஞ்சிபுரம் சங்கர மடம் மற்றும் காமாட்சி அம்மன் கோயில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சாதனா ஹவுஸ், 2வது தளம், 570,P.B.மார்க். வொர்லி, மும்பை-400018. Tel: +9122 66523500 Fax: +9122 24972741
Email id: customercare.mrhfl@mahfin.com, Website – www.mahindrahomefinance.com
பிராந்திய அலுவலகம்: எண்.480, 4-வது தளம், கிவ்ராஜ் காம்ப்ளக்ஸ் II, அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600035.

கோரிக்கை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2) மற்றும் அதற்கு தொடர்புடைய 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 3(1)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு. மேற்படி சட்டத்தின் கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர்கள் மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறார்கள். மேற்படி சட்டம் பிரிவு 13(12) மற்றும் அதற்கு தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்படி சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் பின்வரும் கடன்தாரர்களுக்கு (குறிப்பிடப்பட்ட கடன்தாரர்கள்)/சக-கடன்தாரர்களுக்குக் கோரிக்கை அறிவிப்புகளை (Demand Notices) அனுப்பி அந்தந்த அறிவிப்புகளில் காணும் தொகையை செலுத்துமாறு கோரினார். அதன் விவரம் இங்கே மீண்டும் தரப்பட்டுள்ளது.

வ.எண்.1: கடன் கணக்கு எண். **XSEMTVR00740381; கடன்தாரர்: 1.சுதாகர்.V, சக-கடன்தாரர்கள்: 2.வெங்கடேசன், 3.லலிதா.V, 4.ஹேமாவதி.S, அனைவரது முகவரி,** 68/1, பஜனை கோயில் தெரு, புன்னபாக்கம், திருவள்ளூர், தமிழ்நாடு-602201 **ஜாமீன்தாரர்: 5.தேவி கலா,** எண்.263/2, கொன்னூர் நெடுஞ்சாலை, அயனாவரம், சென்னை-600 023; கோரிக்கை அறிவிப்பு: **09.09.2025;** கோரப்பட்ட தொகை ₹ **5,49,532.94;** **கிளை: திருவள்ளூர்**
ஈடுபெற்ற சொத்து: காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, கிராம நத்தம் பட்டா எண்.417 படி, பழைய கிராம நத்தம் சர்வே எண்.161/1 பகுதி, புதிய கிராம நத்தம் சர்வே எண்.348/6, **எண்.54, புன்னபாக்கம் கிராமம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்** என்னும் முகவரியில் **715 சதுர அடி காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 18 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 18 அடி 8 அங்குலம், வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 38 அடி 8 அங்குலம், வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 39 அடி 4 அங்குலம். எல்லைகள்: வடக்கு: தெரு, தெற்கு: ஊத்துக்குளம், கிழக்கு: ராமலிங்கம் முதலியார் நிலம், மேற்கு: தயாளன் நிலம்.

வ.எண்.2: கடன் கணக்கு எண். **XSEMTVR00874450; கடன்தாரர்: 1.இந்திரா.B,** எண்.2/512, மாரியம்மன் கோயில் தெரு, சின்னம்மாபேட்டை, ஹரிசந்திரபுரம், திருவள்ளூர், தமிழ்நாடு-631210 **சக-கடன்தாரர்: 2.ரவிந்தரன்.S,** எண்.2/513, மாரியம்மன் கோயில் தெரு, சின்னம்மாபேட்டை, ஹரிசந்திரபுரம், திருவள்ளூர், தமிழ்நாடு-631210; கோரிக்கை அறிவிப்பு: **05.12.2024;** கோரப்பட்ட தொகை ₹ **2,46,603.74;** **கிளை: திருவள்ளூர்**
ஈடுபெற்ற சொத்து: 2/513, மாரியம்மன் கோயில் தெரு, சின்னம்மாபேட்டை, திருவள்ளூர், தமிழ்நாடு-631210 என்னும் முகவரியில் உள்ள **சொத்து.** எல்லைகள்: வடக்கு: மனை எண்.8, தெற்கு: சர்வே எண்.17/15-ல் உள்ள காலி நிலம், கிழக்கு: மனை எண்.8, மேற்கு: 16 அடி லே-அவுட் சாலை.

மேற்படி நடவடிக்கையைத் தொடர்ந்து, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அது முழுமையாக செலுத்தப்படும் தேதி வரை / வசூலிக்கப்படும் தேதி வரை உள்ள 24% p.a. (கடனின் காலத்திற்கு ஏற்றாற்போல் மாறுபடும்) வட்டியைச் சேர்த்து மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்-க்கு செலுத்துமாறு மீண்டும் மேற்படி கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
எனவே, மேற்குறித்தவாறு தொகையையும், வட்டியையும் கடன்தாரர்கள் இக்கம்பெனியிடம் செலுத்துமாறு இதன் மூலம் கடன்தாரர்களுக்கு அறிவிறுத்தப்படுகிறது. தவறினால் மேற்படி சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் மேற்காணும் கடனீட்டுச் சொத்துகள் மீது மேற்படி கடன்தாரர்களின் சொந்த கஷ்ட நஷ்டத்திலும் விளைவுகளிலும் கம்பெனி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தேதி: 05.03.2026 **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்**

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்கொள்ள நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படப்பிடிப்பாளர் அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்
சுய செய்தி
பெயர்மாற்றம்

My daughter Tanusha Karuppaiah Raju, daughter of Karuppaiah DOB: 22-Sep-2010, Address No15, 6th Street, Amudham Nagar, Kodungaiyur, Chennai- 118, Shall henceforth be known as Tanusha Karuppaiah for all purposes. (KARUPPAIAH - Father)

My daughter Tanusri Karuppaiah Raju, daughter of Karuppaiah DOB:22-Sep-2010, Address No15, 6th Street, Amudham Nagar, Kodungaiyur, Chennai- 118, Shall henceforth be known as Tanusri Karuppaiah for all purposes. (KARUPPAIAH- Father)

பிறசேவை பகுதி
கலை நிகழ்ச்சிகள்

தமிழ்நாடு வனத்துறை
ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம்,
ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125.
இணையதள ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

துணை இயக்குநர் அலுவலகம், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், கீழே தெரிவிக்கப்பட்டுள்ள சாலை ஒப்பந்த உடன்படிக்கையானது **03.03.2026ம் தேதி முதல் 11.03.2026 வரை** தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்படிவங்கள் **03.03.2026 முதல் 11.03.2026 வரை** அரசு இணையதளம் https:/tntenders.gov.in-லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக **12.03.2026 பிற்பகல் 3.30 மணிக்கு** திறக்கப்படும். கூடுதல் விவரங்கள் ஒப்பந்த அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	வேலையின் பெயர்	மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில்	பிணை வைப்புத் தொகை ரூ.
1.	மல்லபுரம் முதல் மயிலாடும் பாறை வரை உள்ள சாலை மேம்பாட்டு பணி	Rs.1,27,00,632/-	Rs.1,27,700/-

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 04563-260565.
துணை இயக்குநர், ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டம்,
செ.ம.தொ.இ/1581/ஒப்பந்தப்புள்ளி/2026 ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், தஞ்சாவூர்-1

26.02.2026 நாளிட்ட இந்து தமிழ்திசை நாளிதழில் வெளியிடப்பட்ட இவ்வலுவலக குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 96/2025-2026, க.பொ/கட்டட (க & ப) வட்டம், தஞ்சாவூர் நாள்: 24.02.2026 -ல் கீழகண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

வ.எண்	நாளிதழில் வெளியிட்டபடி	திருத்தம்
வரிசை எண். 3	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **04.03.2026 மாலை 3.00 மணி வரை.**	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **09.03.2026 மாலை 3.00 மணி வரை.**
வரிசை எண். 4	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **05.03.2026 மாலை 3.00 மணி முதல்.**	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **10.03.2026 மாலை 3.00 மணி முதல்.**

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள இதர நிபந்தனைகளில் மாற்றங்கள் ஏதுமில்லை

செ.ம.தொ.இ./ 1544 /ஒப்பந்தப்புள்ளி/2026
கண்காணிப்புப் பொறியாளர், பொது, கட்டட (க & ப) வட்டம், தஞ்சாவூர் -1

தமிழ்நாடு அரசு - **நெடுஞ்சாலைத்துறை**
நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருப்பூர்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஓ.அ.எண். 49 / 2025-26 / தவஅ / நாள்: 04.03.2026.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப திருப்பூர் வட்டம் அவர்களால், ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் **களூர்** (நெ), க(ம)ப கோட்டத்தைச் சார்ந்த **இரண்டு பணிகளுக்கு** இணைய வழியில் மட்டுமே **இரு உறை** முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **14.03.2026** அன்று முற்பகல் **11.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **05.03.2026** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 1524 / ஒப்பந்தப்புள்ளி / 2026
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப வட்டம், திருப்பூர்

தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
PC 1136	த.பொ / க.கா & த.தொ	AMC for the SAMSAT IT infrastructure DATA CENTRE
T-2373 & T-2374	த.பொ / மின் தொடரமைப்பு	Supply of auto transformers & Solid Core Insulators
ETS No 66 & 67/25-26	மே.பொ / பொ.க.வ / கோவை	Civil, Electrical & Line works @ 110KV SS

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சுமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tantransco.gov.in, www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in/nicgep/app.**
செ.ம.தொ.இ/1587/ஒப்பந்தப்புள்ளி/2026

Central Bank of India செண்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
1911 से अपने हित में केंद्रित "CENTRAL" TO YOU SINCE 1911
அரும்பாக்கம் கிளை
16, அமராவதி நகர் மெயின் ரோடு, அரும்பாக்கம், சென்னை - 600 106, Ph: 044-23464272
E-mail ID: bmchen4956@centralbank.co.in

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.9(1) -ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

செண்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை செண்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு அந்த சொத்து "**உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக https://baanknet.com என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: Mr.K.சீனிவாசன் மற்றும் Mrs.லலிதா சீனிவாசன், இருவரது வசிக்கும் முகவரி: எண்.14/19, பாரதி தெரு, அவ்வை நகர், சூளைமேடு, சென்னை-600094

கோரிக்கை அறிவிப்பு தேதி: 29.04.2022 / கடன் நிலுவைத்தொகை: 01.03.2026 அன்றுள்ளபடி ₹ **66,20,716.56** சட்டரீதியான கட்டணங்கள், வட்டி, செலவுகள் தவிர்த்து; **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 19.12.2023**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் சுங்குவார்சத்திரம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள்.93/33 & 93/18, பட்டா எண்கள்.1259 & 1258, "OMS கிரீன் சிட்டி" என அழைக்கப்படும் லேஅவுட் (D.T.C.P. vide LP/DTCP No. 256/2019, தேதி 30.05.2019) **கிராம எண்.152, வட்டம்பாக்கம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் மனை எண்.5-ல் பரப்பு 1500 சதுர அடி, மனை எண்.7-ல் பரப்பு 1496 சதுர அடி மற்றும் மனை எண்.8-ல் பரப்பு 1500 சதுர அடி, மனை எண்கள். 5, 7 & 8 -ன் மொத்த பரப்பு 4496 சதுர அடி காலி வீட்டு மனை,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். சொத்தானது Mr.சீனிவாசன் S/o.Mr.கருப்பையா பெயரிலுள்ளது. **மனை எண்.5-ன் பரப்பு 1500 சதுர அடி:** எல்லைகள்: வடக்கு: 30 அடி லேஅவுட் ரோடு, தெற்கு: மனை எண்.8, கிழக்கு: மனை எண்.4, மேற்கு: மனை எண்.6. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 30 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 30 அடி. **மனை எண்.7-ல் பரப்பு 1496 சதுர அடி:** எல்லைகள்: வடக்கு: மனை எண்.6, தெற்கு: 23 அடி லேஅவுட் ரோடு, கிழக்கு: மனை எண்.8, மேற்கு: காலி நிலம். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 47.6 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 30 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 28.3 அடி. **மனை எண்.8-ல் பரப்பு 1500 சதுர அடி:** எல்லைகள்: வடக்கு: மனை எண்.5, தெற்கு: 23 அடி லேஅவுட் ரோடு, கிழக்கு: மனை எண்.4, மேற்கு: மனை எண்.7. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 50 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 50 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 30 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 30 அடி.

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ 43,75,000/-	**டேவணித்தொகை**	₹ 4,37,500/-
ஏல உயர்வு தொகை	₹ 20,000/-	சுவாதீனம் வகை: நேரடியான (Physical)	
இ-ஏல தேதி/நேரம்	20.03.2026	காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை	

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 20.03.2026 மாலை 3.00 மணிக்குள்
**சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 18.03.2026 காலை 10.00